# தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

CODE - DTA 13

UNIT - II

3. பிறப்பியல்
4. புணரியல்

# 3. பிறப்பியல்

தனித்து இயங்கும் ஆற்றல் கொண்ட முதலெழுத்தின் இயல்புகளை நூன்மரபு எடுத்துரைக்கிறது. அத்தனி நின்ற எழுத்துக்களும் அவற்றைச் சார்ந்து வருகின்ற சார்பெழுத்துக்களும் மொழியில் நிற்கும் தன்மையினை மொழிமரபு எடுத்துக்காட்டுகிறது. அவ்விரு வகையாலும் உணர்த்தப்பட்ட எழுத்துக்களின் பிறப்பு முறையை விளக்கமுற உரைப்பது பிறப்பியல் ஆகும். தொல்காப்பியர் எழுத்துக்களின் உருவாக்கத்தை ஒலிப்பான், ஒலிக்கும் இடம், ஒலிப்பு முறை ஆகிய அறிவியல் தன்மையில் இவ்வியலை அமைத்துள்ளது போற்றுதற்குரியதாகும். பிறப்பியலில் அமைந்த நூற்பாக்களை இளம்பூரணர் **21** ஆகவும் நச்சினார்க்கினியர் **20** ஆகவும் காட்டுகின்றனர்.

பிறப்பியல் கூறும் கருத்துக்களை 1.எழுத்துக்களின் பொதுப் பிறப்பு 2.உயிரெழுத்துக்களின் பிறப்பு 3.மெய்யெழுத்துக்களின் பிறப்பு 4.சார்பெழுத்துக்கள் பிறக்கும் முறை 5. தமிழ் எழுத்துக்களுக்கு மாத்திரை கூறும் முறை என ஐந்தாகப் பகுத்துக் காணலாம்.

## எழுத்துக்களின் பொதுப்பிறப்பு

83. **உந்தி முதலா முந்துவளி தோன்றித்**
**தலையினும்[1] மிடற்றினும்[2] நெஞ்சினும்[3] நிலைஇப்**
**பல்லும்[4] இதழும்[5] நாவும்[6] மூக்கும்[7]**
**அண்ணமும்[8] உளப்பட எண்முறை நிலையான்**
**உறுப்புற்று அமைய நெறிப்பட நாடி**
**எல்லா எழுத்தும் சொல்லும் காலைப்**
**பிறப்பின் ஆக்கம் வேறுவேறு இயல**
**திறப்படத் தெரியும் காட்சி யான.**

**[இ-ள்]** உந்தி (கொப்பூழ்) அடியாகத் தோன்றி மேல் எழுந்த காற்று 1.தலை 2.மிடறு (கழுத்து) 3.நெஞ்சு ஆகிய மூன்று இடங்களில் நிலைபெறும். அக்காற்று 4.பல் 5.இதழ் (உதடு) 6.நா 7.மூக்கு 8.அண்ணம் ஆகிய ஐந்து உறுப்புக்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புற எழுத்துக்களாய்ப் பிறக்கும். இவ்வாறு தமிழ் எழுத்துக்கள் பிறக்கும் என்பதை முன்னோர் ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளனர். இவ்எட்டு உறுப்புக்களாலும் பிறக்கும் எழுத்துக்கள் வெவ்வேறு தன்மையில் தோன்றும். அம்முறையை அறிவினால் மனம் ஒன்றி ஆராய அப்பிறப்பின் வேறுபாடுகள் எல்லாம் நன்கு புலப்படும். (1)

## உயிர் எழுத்துக்களின் பொதுப் பிறப்பு

**84. அவ்வழிப்,**
**பன்னீர் உயிரும் தம்நிலை திரியா**
**மிடற்றுப் பிறந்த வளியின் இசைக்கும்.**

[இ-ள்] உந்தியின் அடியாகத் தோன்றிய காற்று மிடற்றின்கண் நிலைபெறும். அக்காற்றை அடிப்படையாகக் கொண்டு பன்னிரண்டு உயிரெழுத்துக்களும் பிறக்கும். அவ்வெழுத்துக்கள் தத்தமக்குரிய மாத்திரை அளவிலிருந்து மாறுபடாமல் ஒலிக்கும்.

அ, இ, உ, எ, ஒ → 1 மாத்திரை
ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ → 2 மாத்திரை

எனவே குற்றியலிகரம், குற்றியலுகரம் ஆகியவை குறைந்து ஒலிக்கும் என்பர் இளம்பூரணர். (2)

## அகர, ஆகாரம் பிறக்கும் முறை

**85. அவற்றுள்,**
**அ[1]ஆ[2] ஆயிரண்டு அங்காந்து இயலும்.**

[இ-ள்] மிடற்றில் நிலைபெற்ற காற்றைக் கொண்டு பிறப்பன உயிரெழுத்துக்கள். அவற்றுள் 1.அகரம் 2.ஆகாரம் என்னும் இரண்டு எழுத்தொலிகளும் அண்ணத்தின் தொழிலாகிய வாயைத் திறக்கும் முயற்சியால் பிறப்பனவாம். (3)

## இ, ஈ, எ, ஏ, ஐ ஆகியவற்றின் பிறப்பு முறை

**86. இ[1]ஈ[2] எ[3]ஏ[4] ஐ[5]என இசைக்கும்**
**அப்பால் ஐந்தும் அவற்றோர் அன்ன**
**அவைதாம்**
**அண்பல் முதல்நா விளிம்புறல் உடைய.**

[இ-ள்] 1.இ 2.ஈ 3.எ 4.ஏ 5.ஐ என்னும் எழுத்தொலிகள் ஐந்தும் முற்கூறப்பட்ட அகர, ஆகாரங்களைப் போல வாயைத் திறந்து கூறும் முயற்சியால் பிறக்கும். அத்துடன் மேல்வாய்ப் பல்லும் நாவின் அடியோரமும் (விளிம்பும்) பொருந்தப் பிறக்கும். (4)

## உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகியவை பிறக்கும் முறை

**87. உ[1]ஊ[2] ஒ[3]ஓ[4] ஔ[5]என இசைக்கும்**
**அப்பால் ஐந்தும் இதழ்குவிந்து இயலும்.**

[இ-ள்] 1.உ 2.ஊ 3.ஒ 4.ஓ 5.ஔ எனப்பகுக்கப்பட்ட எழுத்தொலிகள் ஐந்து. அவை இதழைக் (உதட்டைக்) குவித்துக் கூறுகின்ற முயற்சியால் பிறப்பனவாம். (5)

ஒலி வேறுபாடுகளுக்குச் சிறப்பு விதி

88. தத்தம் திரிபே சிறிய என்ப.

[இ-ள்] பன்னிரண்டு உயிரொலிகளும் மூன்று வகையாகப் பிறக்கும் எனத்தொகுத்துக் கூறப்பட்டன. ஆயினும் அவ்வெழுத்துக்கள் ஒவ்வொன்றும் சிறுசிறு முயற்சி வேறுபாடுடையன. அவற்றை நுண்ணுணர்வால் அறியலாம் என்று கூறுவர் புலவர். (இம்முயற்சி வேறுபாடு மெய்யொலிக்கும் பொருந்தும்) *(6)*

## மெய்யெழுத்துக்களின் பிறப்பு

க், ங் பிறக்கும் முறை

89. ககார[1] ஙகாரம்[2] முதல்நா அண்ணம்.

[இ-ள்] மெய்யெழுத்துப் பதினெட்டனுள் 1.ககாரம் (க்) 2.ஙகாரம் (ங்) என்னும் இரண்டும் முதல் நா (நாவினது அடி) முதல் அண்ணத்தைப் (மேல்வாயின் அடிப்பகுதியைப்) பொருந்தப் பிறக்கும். *(7)*

ச், ஞ் பிறக்கும் முறை

90. சகார[1] ஞகாரம்[2] இடைநா அண்ணம்.

[இ-ள்] 1.சகாரமும் (ச்) 2.ஞகாரமும் (ஞ்) இடைநாவும் இடை அண்ணமும் பொருந்தப் பிறக்கும். *(8)*

ட், ண் பிறக்கும் முறை

91. டகார[1] ணகாரம்[2] நுனிநா அண்ணம்.

[இ-ள்] நாவினது நுனி அண்ணத்தின் நுனிப்பகுதியைப் பொருந்த 1.டகாரம் (ட்) 2. ணகாரம் (ண்) என்னும் இரண்டும் பிறக்கும். *(9)*

க்... ண் (6) எழுத்துக்கள் மூவகையாய்ப் பிறத்தல்

92. அவ்ஆறு எழுத்தும் மூவகைப் பிறப்பின.

[இ-ள்] மேல் ஆறு மெய்யெழுத்துக்களின் பிறப்பு முறை தொகுத்துக் கூறப்பட்டது. அவை 1.முதல் நா முதல் அண்ணம் 2.இடை நா இடை அண்ணம் 3. நுனிநா நுனி அண்ணம் எனப் பிறக்கும் இடங்கள் மூன்றாகும். (ஆறு இடங்களாகக் கொள்ளக் கூடாது) *(10)*

த், ந் பிறக்கும் முறை

93. அண்ணம் நண்ணிய பல்முதல் மருங்கின்
நாநுனி பரந்து மெய்யுற ஒற்றத்
தாம்இனிது பிறக்கும் தகார[1] நகாரம்[2].

[இ-ள்] அண்ணத்தைச் சார்ந்து நிற்பது பல்லின் அடிப்பகுதியாகும். அவ்விடத்தில் நாவினது நுனி அகன்று நன்கு அழுந்தப்பொருந்தும். அப்போது 1.தகாரம் (த்) 2.நகாரம் (ந்) ஆகிய இரண்டும் இனிமையுறப் பிறக்கும். *(11)*

**ற், ன் பிறக்கும் முறை**

94. **அணரி நுனிநா அண்ணம் ஒற்ற**
**றஃகான்[1] னஃகான்[2] ஆயிரண்டும் பிறக்கும்.**

[இ-ள்] நாவினது நுனி மேல்நோக்கிச் சென்று அண்ணத்தைத் தொடும். அதனால் 1.றகாரம் (ற்) 2.னகாரம் (ன்) ஆகிய எழுத்துக்கள் இரண்டும் பிறக்கும். *(12)*

**ர், ழ் பிறக்கும் முறை**

95. **நுனிநா அணரி அண்ணம் வருட**
**ரகாரம்[1] ழகாரம்[2] ஆயிரண்டும் பிறக்கும்.**

[இ-ள்] நாவினது நுனி மேல்நோக்கிச் சென்று அண்ணத்தைத் தடவும். அதனால் 1.ரகாரம் (ர்) 2.ழகாரம் (ழ்) ஆகிய இரண்டு எழுத்தொலிகளும் தோன்றும். *(13)*

**ல், ள் பிறக்கும் முறை**

96. **நாவிளிம்பு வீங்கி அண்பல் முதல்உற**
**ஆவயின் அண்ணம் ஒற்றவும் வருடவும்**
**லகார[1] ளகாரம்[2] ஆயிரண்டும் பிறக்கும்.**

[இ-ள்] நாவினது ஓரம் தடித்து மேற்பல்லின் அடியைத் தொட 1.லகாரம் (ல்) பிறக்கும். அதனை வருட 2.ளகாரம் (ள்) பிறக்கும்.

**விளக்கம்**

இப்பிறப்பு முறையை ஒட்டி ல, ள என்னும் எழுத்துக்கள் தற்காலத்தில் தொடுலகரம், வருடுளகரம் என வேறுபடுத்திக் காட்டப்படுகின்றன. *(14)*

**ப், ம் பிறக்கும் முறை**

97. **இதழ்இயைந்து பிறக்கும் பகார[1] மகாரம்[2].**

[இ-ள்] மேல் உதடும் கீழ் உதடும் தம்முள் பொருந்துவதால் 1.பகாரம் (ப்) 2.மகாரம் (ம்) ஆகிய இரண்டும் பிறக்கும். *(15)*

### வ் பிறக்கும் முறை

98. **பல்இதழ் இயைய வகாரம் பிறக்கும்.**

**[இ-ள்]** மேற்பல்லானது கீழ் இதழைப் (உதடு) பொருந்த வகாரம் (வ்) பிறக்கும். *(16)*

### ய் பிறக்கும் முறை

99. **அண்ணம் சேர்ந்த மிடற்றுஎழு வளியிசை**
**கண்ணுற்று அடைய யகாரம் பிறக்கும்.**

**[இ-ள்]** நாவினது அடி மேல்வாயாகிய அண்ணத்தின் அடியைப் பொருந்தும். அப்போது குரல்வளையில் தங்கிய காற்று மேல்வாயை நன்கு அணைந்து வெளிப்படும். அவ்விடத்து யகர (ய்) எழுத்தொலி தோன்றும். *(17)*

### மெல்லெழுத்துக்களின் பிறப்பு – சிறப்பு விதி

100. **மெல்லெழுத்து ஆறும் பிறப்பின் ஆக்கம்**
**சொல்லிய பள்ளி நிலையின ஆயினும்**
**மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்.**

**[இ-ள்]** ங், ஞ், ண், ந், ம், ன் என்பன ஆறும் மெல்லெழுத்துக்கள் ஆகும். அவை இன்னின்ன உறுப்புக்களின் முயற்சியால் பிறக்கும் என்பன மேற்கூறப்பட்டன. ஆயினும் அவை மூக்கில் நிலைபெற்ற காற்றினை அடிப்படையாகக் கொண்டு முழுமையாகத் தோன்றும்.

### விளக்கம்

உயிரெழுத்துக்கள் மிடற்றுக்காற்றை அடிப்படையாகக் கொண்டு பிறக்கும் என்பது முற்கூறப்பட்டது. இந்நூற்பா மெல்லெழுத்துக்கள் மூக்கினை இடமாகக் கொண்டு பிறக்கும் என்பதைத் தெளிவுபடுத்துகிறது. வல்லெழுத்துக்கள் தலையை இடமாகக் கொண்டும் இடையெழுத்துக்கள் மிடற்றினை இடமாகக் கொண்டும் பிறக்கும் என்பதை உய்த்துணரலாம் *(18)*

### சார்பெழுத்துக்கள் பிறக்கும் முறை

101. **சார்ந்துவரின் அல்லது தமக்குஇயல்பு இலஎனத்**
**தேர்ந்துவெளிப் படுத்த ஏனை மூன்றும்**
**தத்தம் சார்பின் பிறப்பொடு சிவணி**
**ஒத்த காட்சியில் தம்இயல்பு இயலும்.**

[இ-ள்] பிற எழுத்துக்களைச் சாராமல் தாமாகத் தோன்ற இயலாதவை என ஆராய்ந்து கூறப்பட்டவை சார்பெழுத்துக்கள் ஆகும். அவை குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம் என்பனவாகும். இம்மூன்றும் தத்தம் முதலெழுத்துக்களுக்குரிய பிறப்பிடத்தையும் முயற்சியையும் தமக்கு உரியனவாகக் கொண்டு பிறக்கும்.

## விளக்கம்

குற்றியலிகரம் → இகரத்தைப் போலப் பிறக்கும்
குற்றியலுகரம் → உகரத்தைப் போலப் பிறக்கும்
ஆய்தம் → இது முதலெழுத்து இன்றித் தனியொலியாய்ப் பிறக்கும் இயல்புடையது.

ஆய்தம் தலையில் நிலைபெற்ற காற்றைக் கொண்டு பிறக்கும் என்பது இளம்பூரணர் கருத்து. நெஞ்சில் நிலைபெற்ற காற்றை இடமாகக் கொண்டு பிறக்கும் என்கிறார் நச்சினார்க்கினியர். *(19)*

## வேதத்துள் மாத்திரை கூறும் முறை

**102.** **எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து**
**சொல்லிய பள்ளி எழுதரு வளியின்**
**பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து**
**அகத்துஎழு வளியிசை அரில்தப நாடி**
**அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே.**

[இ-ள்] எல்லா எழுத்துக்களும் முன்பு கூறிய முறைப்படி மூன்று இடங்களில் தங்கிய காற்றைக் கொண்டு ஐந்து உறுப்புக்களின் முயற்சியால் உரிய ஓசைகளாக வெளிப்பட்டுத் தோன்றும். கொப்பூழ் அடியாகத் தோன்றும் அக்காற்று உள் உறுப்புக்களில் தங்கிச் சுழன்று எழும். உடலுக்குள்ளேயே எழும் நுண்ணிய ஓசைக்குரிய மாத்திரை அளவுகளைக் குற்றமற ஆராய்ந்து கூறும் முறை அந்தணர்களின் வேதத்துள் இடம்பெற்றுள்ளது. *(20)*

## தொல்காப்பியர் காட்டும் மாத்திரை முறை

**103.** **அஃதுஇவண் நுவலாது எழுந்துபுறத்து இசைக்கும்**
**மெய்தெரி வளியிசை அளவுநுவன் றிசினே.**

[இ-ள்] அந்தணர் வேதத்துள் கூறும் முறை இங்கு எடுத்துரைக்கப்படவில்லை. இவ்வியலில் வாயிலிருந்து வெளிப்பட்டுப் பிறருக்குப் பொருள் புலப்படும் படியாகத் தோன்றும் தமிழ் எழுத்தொலிகளுக்கே பிறப்பிலக்கணத்தையும் அவற்றிற்குரிய மாத்திரை அளவுகளையும் கூறியுள்ளேன்.

**விளக்கம்**

வடநூலார் அகத்தில் உண்டாகும் உருவமற்ற எழுத்தொலிகளைச் சூக்குமை (பரை), பைசந்தி, மத்திமை என மூன்றாகப் பாகுபடுத்துவர். இவற்றுள் சூக்குமை, பைசந்தி என்பன பொருளற்ற ஓசைகளாய் நிற்கும். சூக்குமை வாக்கு மூலாதாரத்தை இடமாகக் கொண்டு அறிவின் வடிவாக நிற்கும். பைசந்தி உந்தியில் உயிர்க்காற்றின் வடிவாய் இருக்கும். மத்திமை வாக்கு நெஞ்சையும் கண்டத்தையும் இடமாகக் கொண்டு எழுத்தோசையை வெளிப்படுத்தாமல் உள்ளறிவு வடிவாய் இருக்கும்.

தன்செவிக்கும் பிறர் செவிக்கும் ஓசை புலனாகும் வண்ணம் எழுத்தொலியாய்ப் பிறப்பதை வடநூலார் வைகரி என்னும் பெயரால் சுட்டுவர். இத்தன்மை கொண்ட எழுத்தொலிகளுக்கே தொல்காப்பியர் முதலான தமிழ் இலக்கண ஆசிரியர்கள் பிறப்பிலக்கணத்தையும் மாத்திரை அளவினையும் கூறுகின்றனர் என்பது ஈண்டு அறியத் தக்கதாகும். **(21)**

---

### எழுத்துக்களைப் பிழையற உச்சரித்தல்

எழுத்துக்கள் நுட்பமான ஒலி வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. அவற்றை முறையாகத் தெரிந்துகொண்டால் பொருட் பிழையின்றி ஒலிக்க முடியும்.

ண → நாக்கின் நுனி மேல்வாய்ப்பற்களுக்கு மேலுள்ள மேடான பகுதியாகிய முன் அண்ணத்தைத் தொட்டால் 'ண' பிறக்கும்.

ந → மேல்வாய்ப்பல்லும் ஈறும் பொருந்துமிடத்தில் நாவின் நுனியும் அதன் ஓரமும் நன்றாகப் பொருந்த 'ந' பிறக்கும்.

ன → மேல்வாய்ப்பல்லின் அடிப்பகுதியை நாக்கின் நுனி முழுமையாகப் பொருந்தாமல் சிறிது தொட 'ன' பிறக்கும்.

ர → மேல்வாய்ப் பற்களுக்குச் சற்று மேடான பகுதியை நாக்கின் நுனி மெல்லத் தடவ 'ர' பிறக்கும்.

ற → மேல்வாய்ப் பற்களுக்குச் சற்று மேடான பகுதியின் கீழ் நாவினது நுனி துடித்துப் (அதிர்ந்து) பொருந்த 'ற' பிறக்கும்.

ல → மேல்வாய்ப் பல்லின் அடியை நுனிநாக்கு ஒற்றுவது போல் தொட 'ல' பிறக்கும்.

ழ → நாக்கின் நுனி மேல்நோக்கி வளைந்து அண்ணத்தைத் தடவ 'ழ' பிறக்கும்.

ள → நுனி நாக்கு சற்று மேல்நோக்கி வளைந்து அண்ணத்தை நன்றாக வருட 'ள' பிறக்கும்.

# 4. புணரியல்

எழுத்துத் தனித்தோ தொடர்ந்தோ பொருள் தரும் வகையில் அமைவது சொல் ஆகும். அச்சொல்லாகிய மொழி மூன்று வகைப்படும் என்பது மொழி மரபில் எடுத்துரைக்கப்பட்டது. அம்மொழிகள் நிலைமொழி, வருமொழியாய் நின்று புணருகின்ற நிலையை எடுத்துரைப்பதால் இவ்வியல் புணரியல் எனப்பெயர் பெற்றது. இனிக் கூறப்போகின்ற உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்பன புணர்ச்சியின் சிறப்பிலக்கணம் கூறுவன. அவற்றிற்குரிய பொது இலக்கணமாகிய கருவி இலக்கணத்தை இவ்வியல் எடுத்துரைப்பதாய் அமைகிறது. இப்புணரியலில் அமைந்த நூற்பாக்கள் **40.**

இவ்வியல் கூறும் செய்திகளை *1.* மொழிமரபின் ஒழிபாக வருவன *2.* புணர்மொழியின் இயல்புகள் *3.* புணர்ச்சியின் வகைகள் *4.*சாரியைகளும் அவற்றின் வகைகளும் **5.** சாரியைத் திரிபுகள் **6.**ஒலிப்பு முறையால் சொற்களை வேறுபடுத்தல் என ஆறாகப் பகுக்கலாம்.

## சொற்களில் முதலும் இறுதியுமாய் அமையும் எழுத்துக்கள்

**104.** **மூன்றுதலை இட்ட முப்பதிற்று எழுத்தின்[1]**
**இரண்டுதலை இட்ட முதலாகு இருபஃது[2]**
**அறுநான்கு ஈற்றொடு நெறிநின்று இயலும்[3]**
**எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்**
**மெய்யே உயிர்என்று ஆஈர் இயல.[4]**

**[இ-ள்]** *1.*முதல், சார்பு எனப் பகுக்கப்பட்ட எழுத்துக்கள் முப்பத்து மூன்று *2.*அவற்றுள் மொழிக்கு முதலாக வரும் எழுத்துக்கள் இருபத்திரண்டு *3.*மொழிக்கு ஈறாக வரும் எழுத்துக்கள் இருபத்து நான்கு *4.*இவ்வெழுத்துக்களால் அமைந்த மொழிகள் உலக வழக்கிற்கும் செய்யுள் வழக்கிற்கும் பொருந்தி வரும். அம்மொழிகள் ஓரெழுத்து ஒருமொழி, ஈரெழுத்து ஒருமொழி, தொடர்மொழி என மூவகைப்படும். இவற்றுள் எந்த ஒரு மொழியாயினும் அது உயிரையோ மெய்யையோ முதலும் இறுதியுமாகக் கொண்டு அமையும். **[எ-டு]**

மரம் → மெய் முதல் மெய் ஈறு (ம்அ + ர்அ+ம்)
இலை → உயிர் முதல் உயிர் ஈறு (இ +ல்ஐ)
ஆல் → உயிர் முதல் மெய் ஈறு (ஆ + ல்)
கலை → மெய் முதல் உயிர் ஈறு (க்அ +ல்ஐ)

**விளக்கம்**

மொழிக்கு முதலாகும் எழுத்துக்கள் (12 + 9 + 1 = 22)
உயிரெழுத்து - 12, மெய் - 9 (க, ச, ஞ, த, ந, ப, ம, ய, வ).
குற்றியலுகரம் - 1 (நுந்தை).
மொழிக்கு இறுதியாகும் எழுத்துக்கள் (12 + 11 + 1 = 24)
உயிரெழுத்து - 12, மெய் - 11 (ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள), குற்றியலுகரம் - 1. (1)

**மெய்யீறுகளின் தன்மை**

**105. அவற்றுள்**
**மெய்ஈறு எல்லாம் புள்ளியொடு நிலையல்.**

**[இ-ள்]** மொழிக்கு ஈறாவன உயிரும் மெய்யும் என்று மேல் நூற்பாவில் கூறப்பட்டது. அவற்றுள் மெய்யீறுகள் எல்லாம் புள்ளியைப் பெற்றே நிற்கும். **[எ-டு]**

உரிஞ், பொருள், நாய், யார், வாள்.

**விளக்கம்**

புள்ளியை ஈறாக உடைய நிலைமொழியின் முன் உயிர் வந்தால் அம்மெய் உயிர்ஏற (உயிர்மெய்யாக) இடம் கொடுக்கும்.

ஆல் + இலை → ஆலிலை

இந்நூற்பாவிலிருந்து மெய்யெழுத்துக்கள் மொழி முதலில் வருவதில்லை. உயிர்மெய்யாகவே நிற்கும் என்பது வலியுறுத்தப்படுகிறது.

கற்றான், பாடினான் (2)

**குற்றியலுகரஈறு புள்ளி பெறுதல்**

**106. குற்றிய லுகரமும் அற்றுஎன மொழிப.**

**[இ-ள்]** மொழி இறுதியில் வரும் குற்றியலுகரம், மெய்யெழுத்தின் தன்மையை ஒத்திருக்கும் என்று சொல்லுவர் புலவர்.

நாகு + அரிது → நாக்ஃ + அரிது → நாகரிது

**விளக்கம்**

குற்றியலுகரத்தை ஈறாக உடைய சொல்லின் முன் உயிர் வந்தால் அக்குற்றியலுகரம் கெட்டு மெய்யெழுத்துப் போல அவ்உயிர் ஏற இடம் கொடுக்கும்.

முற்காலத்தில் குற்றியலுகரம் புள்ளி வைத்து எழுதப்பட்டது என்பது இந்நூற்பா வழி அறியமுடிகிறது.

நாகு், கொக்கு் (3)

## உயிர்மெய் ஈறு உயிர் ஈறாதல்

**107. உயிர்மெய் ஈறும் உயிர்ஈற்று இயற்றே.**

**[இ-ள்]** மொழிகளின் இறுதியில் உயிர்மெய் வரும். அதனை உயிரீற்றின் இயல்பினதாகக் கொள்ள வேண்டும். **[எ-டு]**

விள - ள (ள் + அ) பலா - லா (ல் + ஆ) குறி - றி (ற் + இ) இவை உயிரீறுகள்.

உயிர்மெய் ஈறும் என்னும் தொடரை எச்ச உம்மையாகக் கொண்டு இறுதியில் மட்டுமின்றி இடையில் நிற்கும் உயிர்மெய்யையும் உயிரீறாகக் கொள்ள வேண்டும் என்பர் நச்சினார்க்கினியர்.

வரகு → ர் + அ → இது உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாகும். **(4)**

## எழுத்து வகையால் அமையும் புணர்ச்சி (4)

**108. உயிர்இறு சொல்முன் உயிர்வரு வழியும்[1]**
**உயிர்இறு சொல்முன் மெய்வரு வழியும்[2]**
**மெய்இறு சொல்முன் உயிர்வரு வழியும்[3]**
**மெய்இறு சொல்முன் மெய்வரு வழியும்[4]என்று**
**இவ்வென அறியக் கிளக்கும் காலை**
**நிறுத்த சொல்லே[5] குறித்துவரு கிளவிஎன்று [6]**
**ஆஈர் இயல புணர்நிலைச் சுட்டே.**

**[இ-ள்]** *1.* உயிரை ஈறாகக் கொண்ட சொல்லின் முன் உயிரை முதலாகக் கொண்ட சொல் வருதல் *2.* உயிரை இறுதியாகக் கொண்ட சொல்லின் முன் மெய்யை முதலாகக் கொண்ட சொல் வருதல் *3.*மெய்யை இறுதியாகக் கொண்ட சொல்லின் முன் உயிரை முதலாகக் கொண்ட சொல் வருதல் *4.*மெய்யை இறுதியாகக் கொண்ட சொல்லின் முன் மெய்யை முதலாகக் கொண்ட சொல் வருதல் எனப் புணர்ச்சி நான்காகும். அவ்வாறு வந்து புணரும் மொழிகளை 5.முன்னர் நிறுத்தப்பட்ட சொல் (நிலைமொழி) என்றும் 6. அதனை முடித்தலைக் குறித்து வரும் சொல் (வருமொழி) என்றும் இருவகையினவாக வரையறுத்துக் கூறலாம். **[எ-டு]**

உயிரீற்றுச் சொல்முன் உயிர் வருதல் → ஆ + உண்டு
உயிரீற்றுச் சொல்முன் மெய் வருதல் → ஆ + (வ் + அ) வலிது
மெய்யீற்றுச் சொல்முன் உயிர் வருதல் → ஆல் + இலை
மெய்யீற்றுச் சொல்முன் மெய் வருதல் → ஆல்+ (வ்+ஈ) வீழ்ந்தது

### விளக்கம்

எழுத்து வகையால் நான்காகிய புணர்ச்சி, மொழி வகையால் நிலைமொழி, வருமொழி என இரண்டாகும் என்பதை இந்நூற்பா எடுத்துரைக்கிறது.

**(5)**

## சொல் வகையால் அமையும் புணர்ச்சி (4)

109. **அவற்றுள்**
**நிறுத்த சொல்லின் ஈறாகு எழுத்தொடு**
**குறித்துவரு கிளவி முதல்எழுத்து இயையப்**
**பெயரொடு பெயரைப் புணர்க்கும் காலும்[1]**
**பெயரொடு தொழிலைப் புணர்க்கும் காலும்[2]**
**தொழிலொடு பெயரைப் புணர்க்கும் காலும்[3]**
**தொழிலொடு தொழிலைப் புணர்க்கும் காலும்[4]**
**மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்புஎன**
**ஆங்குஅந் நான்கே மொழிபுணர் இயல்பே.**

**[இ-ள்]** மேற்கூறப்பட்ட நிறுத்த சொல்லின் ஈற்றில் வரும் எழுத்துடன் குறித்துவரு கிளவியின் முதலெழுத்துப் பொருந்துவதே புணர்ச்சி ஆகும். அப்புணர்ச்சியில் இடம்பெறும் இருமொழிகளும் *1.*பெயரோடு பெயர் *2.* பெயரோடு வினை *3.*வினையொடு பெயர் *4.*வினையொடு வினை என நின்று புணரும். அவ்விரு மொழிகளுக்கு இடையில் மூன்று வகை மாற்றங்களும் நிகழும். அவற்றுடன் இயல்பாகவும் புணர்ச்சி அமையும். இவ்வாறு நான்கு வகைகளில் கூடுவதே புணர்மொழிகளின் இயல்பாகும். **[எ-டு]**

பெயர் + பெயர் → தாய் + தந்தை → தாய்தந்தை
பெயர் + வினை → தந்தை + வந்தார் → தந்தை வந்தார்
வினை + பெயர் → வந்தார் + தாய் → வந்தார் தாய்
வினை + வினை → வந்தார் + சென்றார் → வந்தார் சென்றார்

## விளக்கம்

புணர்மொழியில் அடையும் மாற்றங்களைத் தொல்காப்பியர் அடுத்த நூற்பாவில் விளக்குகிறார். ஆனால் இயல்பைப் பற்றிக் கூறவில்லை. இயல்பு புணர்ச்சி என்பது நிலைமொழியும் வருமொழியும் கூடும்போது எவ்வித மாற்றமும் இன்றி நிற்பதாகும். **[எ-டு]**

பொன் + மலர் → பொன்மலர்
மண் + மலை → மண்மலை } இயல்பு

**(6)**

## புணர்மொழித் திரிபுகள் (3)

110. **அவைதாம்,**
**மெய்பிறிது ஆதல்[1] மிகுதல்[2] குன்றல்[3]என்று**
**இவ்வென மொழிப திரியும் ஆறே.**

**[இ-ள்]** சொற்கள் புணரும் போது மூன்று வகை மாற்றங்களை அடையும் என்பது மேற்கூறப்பட்டது. அவை *1.* ஒரு மெய் வேறொரு மெய்யெழுத்தாகத் திரிதல்.

2. இரண்டு சொற்களுக்கு இடையில் ஒரு மெய்யெழுத்துத் தோன்றுதல் 3. நிலைமொழியின் இறுதி மெய்யெழுத்துக் கெடுதல் என்னும் மூன்றுமாகும். [எ-டு]

1. மெய் பிறிதாதல்

அ) மண் + குடம் → மட்குடம் (நிலைமொழி ஈறு திரிந்தது)

ஆ) வெண்மை+தாமரை → வெண்டாமரை (வருமொழி முதல் திரிந்தது)

இ) பொன் + தூண் → பொற்றூண் (இருமொழித் திரிபு)

2. மிகுதல்

வாழை + பழம் → வாழைப்பழம்

3. குன்றல்

மரம் + வேர் → மரவேர்

**விளக்கம்**

மூன்று திரிபு என்று கூறாமல் தொல்காப்பியர் இடன் என்று கூறினார். அதனால் ஒரு புணர்ச்சியில் இம்மூன்றும் ஒருங்கே வருதலும் கொள்ளப்படும்.

பனை + காய் → பன்ஐ+ அம்ங் + காய் → பனங்காய்

பனை - ஐகாரம் கெட்டது; அம் - தோன்றியது; அம் சாரியையின் மகரம் வருமொழிக்கு ஏற்பத் திரிந்தது. (7)

**அடைபெற்ற சொற்களும் புணர்மொழியாதல்**

**111. நிறுத்த சொல்லும்[1] குறித்துவரு கிளவியும்[2]**
**அடையொடு தோன்றினும் புணர்நிலைக்கு உரிய.**

[இ-ள்] 1. நிலைமொழியும் 2. வருமொழியும் அடைமொழியோடு கூடியும் நிற்கும். அவ்வாறு வந்தாலும் அவை புணர்நிலைக்கு உரியனவாகும். [எ-டு]

பூமரம் + கிளை → பூமரக்கிளை (நிலைமொழி அடை பெற்றது)

சோலை +பைங்கிளி → சோலைப்பைங்கிளி(வருமொழி அடை பெற்றது)

செந்தமிழ் + தேன்மொழி → செந்தமிழ்த்தேன்மொழி

(இருமொழியும் அடை பெற்றன) (8)

**மரூஉச் சொற்களும் புணர்மொழியாதல்**

**112. மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்**
**உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே.**

[இ-ள்] இயல்பாக வழங்கும் சொற்களே அன்றி மருவி வழங்கும் சொற்களும் புணர்ச்சிக்கு உரியனவாகும். [எ-டு]

நுனிநா (நாநுனி), புறநகர் (நகர்ப்புறம்)

மீகண் (கண்மீ), முன்றில் (இல்முன்).

**விளக்கம்**

இலக்கணத்தோடு பொருந்திய மரூஉ; இலக்கணத்தோடு பொருந்தாத மரூஉ என மரூஉச் சொல் இரண்டு வகைப்படும். 1.அவ்விருவகையாக மருவிய சொற்கள் 2.செவிக்கு இனிதாகச் சொல் தொகுதியிடத்து மயங்கும் இயல்பைப் பெற்ற சொற்கள் ஆகியவையும் புணரும் நிலைக்குரியன என்பது நச்சினார்க்கினியரின் விளக்கமாகும். இவர் மருவின் தொகுதி என்பதை இன் தொகுதி எனக் கொண்டு பொருள் உரைக்கிறார். **(9)**

**வேற்றுமை, அல்வழிப் புணர்ச்சிகள்**

**113. வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்[1]**
**வேற்றுமை அல்வழிப் புணர்மொழி நிலையும்[2]**
**எழுத்தே சாரியை ஆஇரு பண்பின்**
**ஒழுக்கல் வலிய புணரும் காலை[3].**

**[இ-ள்]** *1.* சொற்கள் புணருகின்ற போது வேற்றுமைப் பொருண்மையிலும் புணரும் *2.* வேற்றுமை அல்லாத அல்வழிப் பொருண்மையிலும் புணரும். இவற்றால் புணர்ச்சி, வேற்றுமைப் புணர்ச்சி என்றும் அல்வழிப் புணர்ச்சி என்றும் பகுத்துக் கூறப்படும். *3.* அவ்விருவகைப் பொருண்மையிலும் சொற்கள் புணரும் போது எழுத்து மிகுதல், சாரியை தோன்றுதல் என்னும் இரண்டு தன்மையினைப் பெறும். **[எ-டு]**

வேற்றுமையில் எழுத்தும் சாரியையும் மிகுதல்

1. விள + கோடு → விளங்கோடு (மெல்லெழுத்துப் பெற்றது)
2. மக + கை → மகவின்கை (இன் சாரியை பெற்றது)

அல்வழியில் எழுத்தும் சாரியையும் மிகுதல்

1. விள +குறிது → விளக்குறிது (வல்லெழுத்துப் பெற்றது)
2. கலம் + குறை → கலத்துக்குறை (அத்துச் சாரியை பெற்றது)

**விளக்கம்**

ஐ முதலாகிய ஆறு வேற்றுமை உருபுகளும் மறைந்தோ வெளிப்பட்டோ புணர்வது வேற்றுமைப் புணர்ச்சியாகும். **[எ-டு]**

நிலம் கடந்தான் → இரண்டாம் வேற்றுமைத் தொகை
நிலத்தைக் கடந்தான் → இரண்டாம் வேற்றுமைத் தொடர்

வேற்றுமை அல்லாத அனைத்தும் அல்வழிப் புணர்ச்சியாகும்.

எழுவாய் வேற்றுமைக்கும் விளி வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை. அவை எழுவாய்த் தொடர், விளித் தொடர்களாக அல்வழிப் பொருண்மையுள் அடங்கும்.

**அல்வழிப்புணர்ச்சியின் வகைகள் (14)**

வேற்றுமை அல்லாத புணர்ச்சி அல்வழிப் புணர்ச்சியாகும்.

அது,

1. பண்புத்தொகை
2. உவமைத்தொகை
3. வினைத்தொகை
4. உம்மைத் தொகை
5. அன்மொழித் தொகை
6. எழுவாய்த் தொடர்
7. விளி
8. பெயரெச்சம்
9. வினையெச்சம்
10. தெரிநிலை வினைமுற்று
11. குறிப்பு வினைமுற்று
12. இடைச்சொல்
13. உரிச்சொல்
14. அடுக்குத்தொடர்

எனப் பதினான்கு வகைப்படும். (10)

**வேற்றுமை உருபுகளின் பெயரும் முறையும் தொகையும் (6)**

**114. ஐ[1] ஒடு[2] கு[3] இன்[4] அது[5] கண்[6] என்னும்**
**அவ்ஆறு என்ப வேற்றுமை உருபே.**

**[இ-ள்]** வேற்றுமைப் பொருட் புணர்ச்சிக்குரிய வேற்றுமை உருபுகள் ஆறு. அவை 1.ஐ 2.ஒடு 3.கு 4.இன் 5.அது 6.கண் என்பனவாகும். **[எ-டு]**

அவனை, அவனொடு, அவனுக்கு,
அவனின், அவனது, அவன்கண். (11)

**கு, கண் உருபுகளின் புணர்ச்சி விதி**

**115. வல்லெழுத்து முதலிய வேற்றுமை உருபிற்கு**
**ஒல்வழி ஒற்றுஇடை மிகுதல் வேண்டும்.**

**[இ-ள்]** மேற்கூறிய ஆறு வேற்றுமை உருபுகளுள் வல்லெழுத்தை முதலில் கொண்ட உருபுகள் இரண்டு. அவை கு (க் +உ), கண் (க்+அ) என்பன்வாகும். அவ்விரண்டும் நிலைமொழியோடு புணரும்போது பொருந்தும் இடங்களுக்கு ஏற்ப வல்லெழுத்தோ மெல்லெழுத்தோ மிக்கு முடியும். **[எ-டு]**

ஊர் + கு → ஊர்க்கு
தாய் + கு → தாய்க்கு
} கு → நான்காம் வேற்றுமை உருபு வல்லெழுத்து மிக்கது.

ஊர் + கண் → ஊர்க்கண்
மணி+கண் → மணிக்கண்
} கண் → ஏழாம் வேற்றுமை உருபு வல்லெழுத்து மிக்கது.

அ + கண் → ஆ+ கண் → ஆங்கண் (மெல்லெழுத்து மிக்கது) (12)

### 'அது' உருபின் 'அ'கரம் கெடுதல்

116. **ஆறன் உருபின் அகரக் கிளவி
ஈறாகு அகரமுனைக் கெடுதல் வேண்டும்.**

**[இ-ள்]** அகரத்தை ஈறாக உடைய சொல் நிலைமொழியாக நிற்கும். அவ்விடத்து அகரத்தை முதலாக உடைய 'அது' என்னும் ஆறாம் வேற்றுமை உருபு வந்து புணரும். அப்புணர்ச்சியில் அது என்பதில் உள்ள அகரம் கெடும். **[எ-டு]**

நம +அது → நம + அது → நமது
என + அது → என + அது → எனது } அகரம் கெட்டது (13)

### வேற்றுமை உருபுகள் பெயரோடு நிற்கும் முறை

117. **வேற்றுமை வழிய பெயர்புணர் நிலையே.**

**[இ-ள்]** பெயர்ச் சொற்களின் பின்னாக (அடுத்து) வேற்றுமை உருபுகள் புணர்ந்து நிற்கும். **[எ-டு]**

அவனை (அவன் + ஐ) → அவன் - பெயர்; ஐ - வேற்றுமை உருபு
சாத்தனை (சாத்தன் + ஐ) → சாத்தன் - பெயர்; ஐ - வேற்றுமை உருபு (14)

### பெயர்களின் வகைகள் (2)

118. **உயர்திணைப் பெயரே[1] அஃறிணைப் பெயர்[2]என்று
ஆயிரண்டு என்ப பெயர்நிலைச் சுட்டே.**

**[இ-ள்]** வேற்றுமை உருபை ஏற்பன பெயர்கள். அப்பெயர்கள் 1.உயர்திணைப் பெயர் 2.அஃறிணைப் பெயர் என இரண்டு வகையாகச் சுட்டிக் கூறப்படும் என்று சொல்லுவர் புலவர். **[எ-டு]**

அரசன் → உயர்திணைப் பெயர்
மாடு → அஃறிணைப் பெயர் (15)

### புணர்ச்சியில் சாரியைக்குரிய இடம்

119. **அவற்றுவழி மருங்கின் சாரியை வருமே.**

**[இ-ள்]** வேற்றுமை உருபுகளை ஏற்பன பெயர்கள். அப்பெயர்களுக்குப் பின்னாகச் சாரியைகள் வரும். **[எ-டு]**

அரசியின் அழகு → அரசி + இன் + அழகு → இன் - சாரியை
நிலத்தியல்பு → நிலம் + அத்து + இயல்பு → அத்து - சாரியை

### விளக்கம்

வேறாகி (பிரிந்து) நிற்கும் இருமொழிகளைத் தம்முள் சேர்த்து வைக்கும் பொருட்டு இயைந்து நிற்கும் எழுத்தோ சொல்லோ சாரியை ஆகும். அச்சாரியை பெரும்பாலும் பெயருக்கும் வேற்றுமை உருபுக்கும் இடையில் வரும். (16)

## சாரியை மொழிகள் (9 + 8 = 17)

**120.** **அவைதாம்,**
**இன்னே[1] வற்றே[2] அத்தே[3] அம்மே[4]**
**ஒன்னே[5] ஆனே[6] அக்கே[7] இக்கே[8]**
**அன்[9]என் கிளவி உளப்படப் பிறவும்**
**அன்ன என்ப சாரியை மொழியே.**

**[இ-ள்]** 1.இன் 2.வற்று 3.அத்து 4.அம் 5.ஒன் 6.ஆன் 7.அக்கு 8.இக்கு 9.அன் எனக் கூறப்பட்ட ஒன்பதும் அவற்றைப் போன்ற பிறவும் சாரியையாகிய சொற்களாகும் என்று சொல்லுவர்.

பிறவும் என்றதனால் 1.தம் 2.நம் 3.நும் 4.எம் (உம்) 5.ஞான்று 6.கெழு 7.ஏ 8.ஐ என்பனவும் சாரியைகள் என்பர் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும். **(17)**

## 'இன்' சாரியையின் இ(கரம்) கெடுதல்

**121.** **அவற்றுள்**
**இன்னின் இகரம் ஆவின் இறுதி**
**முன்னர்க் கெடுதல் உரித்தும் ஆகும்.**

**[இ-ள்]** ஆ என்பது ஓரெழுத்து ஒருமொழியாகும். அச்சொல்லின் பின்னர் இன் என்னும் சாரியை வரும். அப்போது அச்சாரியையின் முதலெழுத்தாகிய இகரம் கெடும். னகர ஒற்று மட்டுமே நிற்கும். **[எ-டு]**

ஆ + ஐ → ஆ + இன் + ஐ → ஆ + இ̸ன் + ஐ → ஆனை

ஆகாரத்திற்குக் கூறிய விதி ஆகார ஈறாகிய மா என்பதற்கும் பொருந்தும்.

மா + ஐ → மா + இன் + ஐ → மா + இ̸ன் + ஐ → மானை

கெடுதலும் உரித்து என்பதனால் கெடாமையும் உண்டு.

ஆ+இன்+ஐ → ஆவினை (ஆ+வ்+இன்+ஐ) } வகர உடம்படுமெய்
மா+இன்+ஐ → மாவினை (மா+வ்+இன்+ஐ) } தோன்றியது.

**(18)**

## 'இன்' சாரியையின் னகர ஒற்றுத் (ன்) திரிதல்

**122.** **அளவாகு மொழிமுதல் நிலைஇய உயிர்மிசை**
**னஃகான் றஃகான் ஆகிய நிலைத்தே.**

**[இ-ள்]** அளவுப்பெயர் வருமொழியாய்ப் பின் நிற்கும். அதற்கு முன் குற்றியலுகர எண்ணுப்பெயர் நிலைமொழியாய் நிற்கும். அதனைச் சார்ந்து இன் சாரியை வரும். அவ்இன் சாரியையின் னகர ஒற்று (ன்)றகர ஒற்றாகத்(ற்) திரியும். **[எ-டு]** பதிற்றகல்

பத்து + அகல்
பத்து + இன் + அகல் → இன் சாரியை பெறுதல் (நூ.437)
பத்து + இன் + அகல் → நிலைமொழியின் து கெடுதல் (நூ.434)
பதின் + அகல் → நிலைமொழியும் வருமொழியும் புணர்தல் (நூ.140)
பதிற் + அகல் → நிலைமொழியின் னகரம் றகரமாதல் (நூ.122)
பதிற்ற் + அகல் → பதிற்றகல்

முற்ற (நூ.433) என்பதால் ஒற்று இரட்டித்து நிலைமொழியும் வருமொழியும் (நூ.139) புணர்ந்தன. **(19)**

## 'வற்று'ச் சாரியையின் வகர ஒற்று (வ்) கெடுதல்

**123. வஃகான் மெய்கெடச் சுட்டுமுதல் ஐம்முன்
அஃகான் நிற்றல் ஆகிய பண்பே.**

**[இ-ள்]** சுட்டெழுத்தை முதலாக உடைய ஐகார ஈற்றுச் சொல் அவை, இவை, உவை என்பனவாகும். அச்சொற்களின் முன் வற்றுச் சாரியை வரும். அவ்விடத்து அச்சாரியையில் உள்ள வகர ஒற்று (வ்) கெட அற்று ஆகிப் புணரும். **[எ-டு]**

அவை+ஐ→அவை+வற்று+ஐ→ வற்றுச்சாரியை பெறுதல். (நூ.178)
அவை+வ்அற்று+ஐ → வற்று = அற்று ஆதல் (நூ.123)
அவை+ய்+அற்று+ஐ (யகர உடம்படுமெய் தோன்றியது)
அவையற்றை **(20)**

## னகர ஈற்றுச் சாரியையின் ஈறு (ன் → ற்) திரிதல்

**124. னஃகான் றஃகான் நான்கன் உருபிற்கு.**

**[இ-ள்]** னகரத்தை (ன்) ஈறாக உடைய சாரியையின் முன்னர் நான்காம் வேற்றுமை உருபு வரும். அவ்விடத்து னகர ஒற்று றகர ஒற்றாகத் திரியும். (னகர ஈற்றுச் சாரியைகளாவன ; **இன், ஒன், ஆன், அன்**) **[எ-டு]**

விள + இன் + கு → விளவிற்கு
கோ + ஒன் + கு → கோஒற்கு
ஒருபஃது + ஆன் + கு → ஒருபாற்கு
அது + அன் + கு → அதற்கு **(21)**

## 'ஆன்' சாரியைக்குச் சிறப்பு விதி

**125. ஆனின் னகரமும் அதனோர் அற்றே
நாள்முன் வருஉம் வல்முதல் தொழிற்கே.**

**[இ-ள்]** நாட்பெயர்களின் முன் வல்லெழுத்தை முதலாக உடைய வினைச்சொல் வரும். அவ்விடத்துத் தோன்றும் ஆன் சாரியையின் னகர ஒற்று (ன்) மேற்கூறப்பட்டதைப் போல் றகர ஒற்றாகத் (ற்) திரியும்.

[எ-டு] பரணியாற் கொண்டான்.
பரணி + கொண்டான் → பரணி + ஆன் + கொண்டான் →
பரணி + ஆற் + கொண்டான் → பரணியாற் கொண்டான். (22)

## 'அத்து'ச் சாரியையின் அ(கரம்) கெடுதல்

**126. அத்தின் அகரம் அகரமுனை இல்லை.**

[இ-ள்] அகரத்தை ஈறாக உடைய சொல்லின் முன் அத்துச் சாரியை வந்து புணரும். அப்போது அத்து என்பதில் உள்ள அகரம் கெடும்.
[எ-டு]
மக +கை→மக+அத்து+கை → மக +த்து +கை → மகத்துக்கை

### விளக்கம்

மக (இளமை) என்பது விரவுப்பெயர். மக → அகரம் (இயல்பு ஈறு)
மரம் + கிளை → மர +அத்து + கிளை → மரத்துக்கிளை
மரம் என்பதில் உள்ள மகர மெய் (ம்) விதிப்படி (நூ.310) கெட்டு மர என அகர ஈறாய் நிற்கும். இது விதி ஈறு ஆகும். (23)

## 'இக்கு'ச் சாரியையில் இ(கரம்) கெடுதல்

**127. இக்கின் இகரம் இகரமுனை அற்றே.**

[இ-ள்] இகரத்தை ஈறாக உடைய சொல்லின் முன் இக்குச் சாரியை வந்து புணரும். அவ்இக்குச் சாரியையில் உள்ள இகரம் கெடும். [எ-டு]
ஆடி+கொண்டான் → ஆடி+இக்கு+கொண்டான்; ஆடிக்கு + கொண்டான்→ ஆடிக்குத் கொண்டான் (வல்லெழுத்து மிக்கது - நூ.426)
(24)

## ஐகார ஈற்றின் முன் இக்கின் இ(கரம்) கெடுதல்

**128. ஐயின் முன்னரும் அவ்வியல் நிலையும்.**

[இ-ள்] ஐகாரத்தை ஈறாக உடைய சொல்லின் முன்னரும் இக்குச் சாரியை வரும். அது மேற்கூறியபடி (நூ. 127) கெட்டு முடியும். [எ-டு]
சித்திரை + கொண்டான் → சித்திரை+இக்கு+கொண்டான் →
சித்திரைக்குக் கொண்டான்
(25)

## 'அக்கு'ச் சாரியையின் இறுதிகள் (க்கு) கெடுதல்

**129. எப்பெயர் முன்னரும் வல்லெழுத்து வருவழி**
**அக்கின் இறுதிமெய் மிசையொடும் கெடுமே**
**குற்றிய லுகரம் முற்றத் தோன்றாது.**

[இ-ள்] எவ்வகைப்பட்ட பெயர்ச்சொல்லின் முன்னரும் வல்லெழுத்தை முதலாக உடைய சொல் வந்து புணரும் போது அக்குச் சாரியை தோன்றும்.





அவ்விடத்து அக்கின் இறுதியில் நின்ற உகரம், அது ஏறிய வல்லெழுத்தோடும் (கு) அதற்கு முன் நிற்கும் ஒற்றொடும் (க்) கெடும். (அகரம் மட்டும் கெடாமல் நிற்கும்). [எ-டு]

குன்று + கூகை → குன்று + அக்கு + கூகை → குன்று + அ + கூகை → குன்றக்கூகை

மன்று + பெண்ணை → மன்று + அக்கு + பெண்ணை → மன்று + அ + பெண்ணை → மன்றப்பெண்ணை. (26)

## 'அம்' சாரியையின் மகரம் (ம்) திரிதல்

**130. அம்மின் இறுதி க[1]ச[2]த[3]க் காலைத்**
**தன்மெய் திரிந்து ங[1]ஞ[2]ந[3] ஆகும்.**

[இ-ள்] 1.க் 2.ச் 3.த் என்னும் வல்லெழுத்தை முதலாக உடைய சொற்களின் முன் அம் சாரியை தோன்றும். அதன் ஈற்றெழுத்தாகிய மகரம், வரும் எழுத்துக்களுக்கு ஏற்ப 1.ங் 2.ஞ் 3.ந் எனத் திரியும். [எ-டு]

1. புளி + கோடு → புளி + அம் + கோடு (க - ங) → புளியங்கோடு
2. புளி + செதிள் → புளி + அம் + செதிள் (ச - ஞ) → புளியஞ்செதிள்
3. புளி + தோல் → புளி + அம் + தோல் (த-ந) → புளியந்தோல் (27)

## 'அம்' சாரியையின் மகரம் (ம்) கெடுதல்

**131. மென்மையும்[1] இடைமையும்[2] வரூஉம் காலை**
**இன்மை வேண்டும் என்மனார் புலவர்.**

[இ-ள்] அம் சாரியையின் முன் 1.மெல்லெழுத்தை முதலாக உடைய சொற்களும் 2. இடையெழுத்தை முதலாக உடைய சொற்களும் வந்து புணரும். அப்புணர்ச்சியில் அம் சாரியையின் இறுதியில் உள்ள மகர ஒற்றுக் கெடும் என்று சொல்லுவர் புலவர். [எ-டு]

1. புளி + ஞெரி → புளி + அம் + ஞெரி → புளிய ஞெரி } யகர உடம்
2. புளி + யாழ் → புளி + அம் + யாழ் → புளிய யாழ் } படுமெய் (28)

## 'இன்' வேற்றுமை முன் 'இன்' சாரியை தோன்றாமை

**132. இன்னென வரூஉம் வேற்றுமை உருபிற்கு**
**இன்னென் சாரியை இன்மை வேண்டும்.**

[இ-ள்] ஐந்தாம் வேற்றுமை உருபு 'இன்' ஆகும். அதனைப் பெயர்கள் ஏற்கும்போது இடையில் இன் என்னும் சாரியை தோன்றாது. [எ-டு]

விள + இன் → விளவின்

விள + இன் + இன் → விளவினின் என எழுதுதல் கூடாது. சிறுபான்மை இன் சாரியை வருவதுமுண்டு. [எ-டு] பாம்பினின் கடிது தேள் (29)

பாம்பு + இன் (சாரியை) + இன் (வேற்றுமை உருபு)

## புணர்மொழிகளில் சாரியை பெறும் இடம்

133. **பெயரும் தொழிலும் பிரிந்துஒருங்கு இசைப்ப**
**வேற்றுமை உருபு நிலைபெறு வழியும்**
**தோற்றம் வேண்டாத் தொகுதிக் கண்ணும்**
**ஒட்டுதற்கு ஒழுகிய வழக்கொடு சிவணிச்**
**சொற்சிதர் மருங்கின் வழிவந்து விளங்காது**
**இடைநின்று இயலும் சாரியை இயற்கை**
**உடைமையும் இன்மையும் ஒடுவயின் ஒக்கும்.**

**[இ-ள்]** பெயரோடு பெயரும் பெயரோடு வினையும் மாறாமலும் மாறியும் புணர்வது புணர்ச்சியாகும். அப்புணர்ச்சியில் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் பெயரும் வினையுமாகப் பிரிந்தும் ஒலிக்கும். பெயரும் வினையுமாய்க் கூடியும் ஒலிக்கும். அவ்விடங்களில் வேற்றுமை உருபுகள் மறையாமல் வெளிப்பட்டும் தோன்றும். வெளிப்பட்டு நில்லாமல் தொகையாகவும் (மறைந்தும்) நிற்கும். அத்தொடர், தொகை மொழிகளில் தாம் பொருந்துதற்கு ஏற்ற இடங்களில் சாரியை வரும். அச்சாரியை பெறும் புணர்மொழிகளைப் பகுதி, விகுதி முதலாகப் பிரித்துக் காணுமிடத்துச் சாரியைகள் பெரும்பாலும் இடையில் வரும். ஈற்றில் வருவது சிறுபான்மையாகும். ஒடு உருபு வெளிப்பட்டு நிற்கின்ற மூன்றாம் வேற்றுமைத் தொடரில் சாரியை வருவதும் உண்டு. வாராமல் இருப்பதும் உண்டு. **[எ-டு]**

1. விளவினைக் குறைத்தான் → (விள - பெயர்; குறைத்தான் - வினை) பெயரும் தொழிலும் பிரிந்து இசைத்தன. (பிரிந்திசைத்தல் - வேறாய் நிற்றல்).

விளவினைக் குறைத்தவன் → (விள + பெயர்; குறைத்தவன் - வினையாலணையும் பெயர்) பெயரும் பெயரும் ஒருங்கிசைத்தன. (பெயரும் பெயரும் பிரிவின்றி நின்றன).

2. வானத்தின் வழுக்கி / வானத்து வழுக்கி } சாரியை பெற்றுப் பிரிந்திசைத்தல்

வானத்தின் வழுக்கல் / வானத்து வழுக்கல் } சாரியை பெற்று ஒருங்கிசைத்தல்

3. விளவின் கோடு → சாரியை பெற்று உருபின்றி ஒருங்கிசைத்தல்
விளவினது கோடு → சாரியையும் ஆறாம் வேற்றுமை உருபும் பெற்று ஒருங்கிசைத்தல்

4. மரத்தின்கண் கட்டினான் } பிரிந்திசைத்தல்
மரத்துக்கட்டினான்

மரத்துக்கண் குரங்கு } ஒருங்கிசைத்தல்
மரத்துக் குரங்கு

} சாரியை பெற்றுக் 'கண்' உருபு வெளிப்பட்டும் மறைந்தும் நின்றது.

5. நிலாக்கதிர் } சாரியை சேர்த்துக் கூறும்
நிலாமுற்றம் } வழக்கு இல்லாமை

6. பூவினொடு விரிந்த கூந்தல் } ஒடு உருபு இன் சாரியை பெற்றும்
பூவொடு விரிந்த கூந்தல் } பெறாமலும் வந்தது.

7. சாரியை பெரும்பான்மையும் இடையில் வரும். சிறுபான்மை ஈற்றில் வரும்.

எல்லார் + தம் + ஐ + உம் → எல்லார்தம்மையும்

(சா்ரியை ஈற்றில் வந்தது) **(30)**

## 'அத்து', 'வற்று'ச் சாரியை முன் நிலைமொழி ஈறுகெடுதல்

**134. அத்தே வற்றே ஆயிரு மொழிமேல்**
**ஒற்றுமெய் கெடுதல் தெற்றென்று அற்றே**
**அவற்றுமுன் வரூஉம் வல்லெழுத்து மிகுமே.**

**[இ-ள்]** மெய்யெழுத்தினை ஈறாக உடைய சொற்கள் நிலைமொழியாய் நிற்கும். அவற்றின் முன் அத்து, வற்று என்னும் சாரியை புணரும். அதனால் நிலைமொழியின் ஈற்றில் உள்ள மெய்யெழுத்துக் கெடும். வருகின்ற மொழிக்கேற்ப வல்லெழுத்து மிக்கு முடியும் என்பது தெளியப்பட்டதாகும். **[எ-டு]** கலத்துக்குறை, அவற்றுக்கோடு.

கலம் + குறை → கலம் + அத்து + குறை → மகரம் கெட்டது
கல + அத்து + குறை → அத்தின் அகரம் கெட்டது.
கலத்துக்குறை → வல்லெழுத்து மிக்கது.
அவ் + கோடு → அவ் + வற்று + கோடு → வகரம் கெட்டது.
அ + வற்று + கோடு → அவற்றுக்கோடு (வல்லெழுத்து மிக்கது) **(31)**

## எழுத்துச் சாரியைகள் (3)

**135. காரமும்[1] கரமும்[2] கானொடு[3] சிவணி**
**நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை.**

**[இ-ள்]** *1.காரம் 2.கரம் 3.கான்* ஆகிய மூன்றும் எழுத்துக்களைப் பொருந்தி வரும் சாரியைகள். இவை எல்லா ஆசிரியராலும் எழுத்துச் சாரியை என ஏற்றுக் கொள்ளப்பட்டவை ஆகும். **[எ-டு]**

ஆகாரம், இகரம், ஐகான்

**விளக்கம்**

காரம் முதலிய மூன்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட (நேரத் தோன்றும்) சாரியை என்றதனால் ஏற்றுக்கொள்ளப்படாத எழுத்துச் சாரியைகளும் உள்ளன. அவை ஆனம், ஏனம், ஓனம் என்பன. தற்காலத்தில் ஆனா, ஆவன்னா என எழுத்துக்களுக்கேற்பப் பலவாறாகச் சாரியை சேர்த்தே எழுத்துக்களைக் கற்றுக் கொடுக்கின்றனர்.

மெய் எழுத்துக்களுக்கு முன் இ என்னும் எழுத்தையும் பின் கு(மு)ற்றியலுகர ஈற்றையும் வைத்து இக்கு ... இன்னு எனச் சொல்லித் தருகின்றனர். அதனை ஆராய்ந்து பார்த்து வெளிப்படுத்துவது அறிஞர்தம் கடமையாகும். *(32)*

## நெட்டெழுத்துப் பெறும் சாரியை (1)

**136. அவற்றுள்**
**கரமும் கானும் நெட்டெழுத்து இலவே**

**[இ-ள்]** மேற்கூறிய மூன்றனுள் கரம், கான் என்னும் இரண்டையும் நெட்டெழுத்துக்கள் பொருந்தி வருவதில்லை. (காரச் சாரியை மட்டுமே நெட்டெழுத்துக்கு உரியதாம்) **[எ-டு]**

ஆகாரம், ஈகாரம் *(33)*

## குற்றெழுத்துக்கள் பெறும் சாரியைகள் (3)

**137. வரன்முறை மூன்றும் குற்றெழுத்து உடைய.**

**[இ-ள்]** எழுத்துச் சாரியை என வரையறுக்கப்பட்டவை காரம், கரம், கான் என்பனவாகும். அம்மூன்றும் குற்றெழுத்துக்கு உரியவையாகும். **[எ-டு]**

அகரம், அகாரம், அஃகான்
மகரம், மகாரம், மஃகான் *(34)*

## ஐ, ஔ பெறும் சாரியை (1 + 1)

**138. ஐகார[1] ஔகாரம்[2] கானொடும் தோன்றும்.**

**[இ-ள்]** *1.*ஐ *2.*ஔ என்னும் நெட்டெழுத்துக்கள் இரண்டும் காரச் சாரியையோடு (நூ.*136*) கான் சாரியையும் பொருந்தி வரும். **[எ-டு]**

ஐகான் (ஐகாரம்); ஔகான் (ஔகாரம்) *(35)*

## மெய்யீறும் உயிர்முதலும் உயிர்மெய்யாதல்

**139. புள்ளி ஈற்றுமுன் உயிர்தனித்து இயலாது
மெய்யொடும் சிவணும் அவ்வியல் கெடுத்தே.**

**[இ-ள்]** புள்ளியை ஈறாக உடைய சொல்லின் முன் உயிரை முதலாகக் கொண்ட சொல் வந்து புணரும். அப்போது மெய்யும் உயிரும் தனித்து நிற்பதில்லை. உயிரெழுத்துத் தன் முன்னுள்ள மெய்யின் புள்ளியை நீங்கச் செய்து உயிர்மெய்யாய் நிற்கும். **[எ-டு]**

தேன்+அடை → தேனடை ; வாள் +எடு → வாளெடு
ஆல்+இலை → ஆலிலை ; பால்+ஏடு → பாலேடு

(அவ்வியல் கெடுத்தல் - மெய்பெற்ற புள்ளியை நீக்குதல்). *(36)*

## உயிரைப் பிரிந்தமெய் புள்ளி பெறுதல்

**140. மெய்உயிர் நீங்கின் தன்உரு ஆகும்.**

**[இ-ள்]** உயிர்மெய்யாய் நிற்கும் எழுத்திலிருந்து உயிர் நீங்கும். அவ்விடத்து மெய்யெழுத்துத் தன் பழைய நிலையாகிய புள்ளியுடன் கூடிய வடிவைப் பெறும். **[எ-டு]**

ஆலிலை → ஆல் + இலை
பொருளீட்டம் → பொருள் + ஈட்டம்
வானுலகு → வான் + உலகு *(37)*

## உடம்படுமெய்

**141. எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருவுகொளல் வரையார்.**

**[இ-ள்]** உயிரீற்றுச் சொற்கள் நிலைமொழியாக நின்று உயிர் எழுத்தை முதலாக உடைய வருமொழியுடன் புணரும். அவ்விரு மொழிகளுக்கு இடையில் உடம்படுமெய் தோன்றும். அதனை அறிஞர் நீக்காமல் ஏற்றுக் கொள்வர். **[எ-டு]**

1. கலை+அரசி → கலையரசி (யகர உடம்படுமெய்)
2. பூ+அழகி → பூவழகி (வகர உடம்படுமெய்)
3. தே+ஆரம் → தேவாரம்; ஏ+இவள் → ஏயிவள் (வ, ய)

1. இகர, ஈகார, ஐகார ஈற்றுச் சொற்கள் யகர உடம்படுமெய்யைப் பெறும் 2. எஞ்சியவை வகர உடம்படுமெய்யைப் பெறும் 3. ஏகாரம் ய், வ் ஆகிய இரண்டையும் பெறும்.

ஆ+இடை → ஆயிடை (ஆவிடை)
உவம+இயல் → உவமயியல் (உவமவியல்)
கோ+இல் → கோவில் (கோயில்)
} இவை மாறுபட நின்றன *(38)*

## பொதுவாய் நிற்கும் புணர்மொழிகளில் பொருள் காணும் முறை

**142. எழுத்தோர் அன்ன பொருள்தெரி புணர்ச்சி**
**இசையில் திரிதல் நிலைஇய பண்பே.**

**[இ-ள்]** எழுத்தின் தன்மை வேறுபடாமல் பொருள் வேறுபட்டு நிற்கும் புணர்மொழிகள் உள்ளன. அவை எடுத்தல், படுத்தல், நலிதல் என்னும் ஓசை வேறுபாட்டின் காரணமாகப் பொருள் வேறுபட்டு நிற்கும் சொற்களை உடையனவாம். **[எ-டு]**

குன்றேறாமா, குறும்பரம்பு. *(39)*

## பொதுப் புணர்மொழிகளின் எழுத்து முறை

**143. அவைதாம்,**
**முன்னப் பொருள புணர்ச்சி ஆயின்**
**இன்ன என்னும் எழுத்துக்கடன் இலவே.**

**[இ-ள்]** பல பொருள்களுக்கும் பொதுவாய் அமையும் புணர்மொழிகள் அனைத்தும் சொல்லுவோனின் குறிப்பால் பொருளை உணர்த்துவன ஆகும். அவை நிலைமொழி, வருமொழியாக வைத்து இத்தன்மையில் புணரும் என்னும் எழுத்து முறைமையினை உடையன அல்ல.

### விளக்கம்

குன்றேறாமா என்னும் புணர்மொழி,

குன்று + ஏறு + ஆமா
குன்று + ஏறா + மா

எனச் சொல்லுவோனின் தன்மைக்கேற்ப வெவ்வேறு பொருள்பட நின்றது. அதனைப் போலக் குறும்பரம்பு என்பது,

குறும் + பரம்பு
குறும்பர் + அம்பு

எனப் பிரித்துப் பொருள் காண நின்றது. எனவே இவற்றைச் சொல்லுவோனின் குறிப்பால் அறிந்தே புணர்க்க வேண்டும். இவ்வகைச் சொற்களைப் பொதுவாக இன்ன எழுத்து உடையது எனப் பிரித்துப் புணர்ச்சி விதி கூற முடியாது. *(40)*